# டொன்பொஸ்கோ இளையோரின் சுற்றுலா









பிரான்ஸ் - இலங்கைத் தமிழ் கத்தோலிக்க பணியகத்தால் வறிய மாணவர்களுக்காக,
மாணவர் விடுதிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு - 28-06-2022





உறவுகள்
Uravukhal

உலகெங்கும் சென்று
படைப்பிற்கெல்லாம்
நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்

ஆடி ஆவணி புரட்டாதி 2022


Amonerie Tamoule catholique Srilankaise 57, Bld de Belleville, 75011 - PARIS - FRANCE.

இதழ் 83

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் காலாண்டுப் பத்திரிகை

# புனித தேவசகாயமே!

## எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்




தூய ஆவியே, உம்மில் நம்பிக்கை கொண்டோரின் இதயங்களை நிரப்பியருளும்,

# உறவுகள்
Uravukhal


**ஆசிரியர்:**

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்

**உதவி ஆசிரியர் குழு:**

திருமதி: றெஜீனா சிவகுமாரன்
திரு: சில்வெஸ்ரர் தம்பிராசா - மறையாசிரியர்
திரு: ஆனந்தன் செபமாலை
திருமதி: தயாளினி வில்லியம் றெஜினோல்ட்
திருமதி: ஏஞ்சல் யேக்கப்
செல்வி: புளோறன்ஸ் யாழ்நிலா

**மறையாசிரியர்:** திரு: ரி. எம். சந்தியாகு



**தொடர்புக்கு:**

« URAVUKAL »
Aumônerie Tamoule Catholique
Srilankaise
Chapelle Notre Dame Réconciliatrice
57, Bld de Belleville
75011 Paris - France

**Tel:** 01 48 06 95 05
**E - mail:** uravukhal.france@gmail.com
**Website:** www.uravukal.org



**வெளியீடு:**
இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் - பிரான்ஸ்

No 83

**சந்தா விபரம்**
தனிப்பிரதி ஒன்று: 2€
வருடச் சந்தா விபரம்: 20€
ஏனைய நாடுகளுக்கு: 22€

**கணினி வடிவமைப்பு:** றெஜீனா சிவகுமாரன்
Uravukal
இணையதள பதிப்பாசிரியர்




## ஆசிரியர் எண்ணம்



**அன்பர் இயேசுவின் இனிய அன்பர்களே!**

**அன்பு என்பது வளர்ந்து வரும் இக் காலச் சூழலில் பலபரிமானங்களைஉள்ளடக்கியதாக இருக்கின்றது தன்னைச் சார்ந்தவரிடம் அன்பு, வேறு யாரிடமும் அன்பு இல்லை. இது சுயநல அன்பு.**

எதிரே இருப்பவர்கள் வெறுப்பை உமிழ்ந்தாலும், அன்பைச் செலுத்துவது இது கள்ளம் கபடமற்ற அன்பு, தான் என்ற அகந்தையை விட்டு அன்பு செலுத்துவது இது பெருந்தன்மை கலந்த அன்பு, தன் ஆசைகளையும், விருப்பத்தையும் மற்றவர்களுக்காக விட்டுக் கொடுப்பது இது பொதுநல அன்பு, இதற்கெல்லாம் அப்பாற்பட்டது தான் நம் கல்வாரி நாயகன் இயேசுவின் அன்பு.

பிரதிபலன் பார்க்காது நமக்காகத் தன் உயிரைக் கொடுத்தவர் இயேசு. அதுதான் உண்மையான அன்பு. இஸ்ரயேல் மக்களை எந்த அளவு அன்பு செய்தார் என்று தன்னுடைய வார்த்தையினால் மட்டுமல்ல, தன்னுடைய செயல்பாட்டால் வெளிப்படுத்தினார் இயேசு. இத்தகைய அன்பைப் பற்றி திருக்குறள் தந்த திருவள்ளுவரும் அன்புடைமை என்ற அதிகாரத்தில்

**அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர்**
**அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு** என்று

அதாவது அன்பு இல்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கே உரிமையாக்கிக்கொண்டு வாழும் தன்னலக்காரராய் இருப்பர், அன்புடையவரோ தம் உடம்பையும் பிறர் நலத்துக்காக ஈந்து மகிழும் இயல்புடையவராக வாழ்வர். எனவே எமது அன்பு வாழ்வு எவ்வாறு இருக்கின்றது எனச் சீர்தூக்கிப் பார்ப்போம்.

அடுத்து நாம் செப்டம்பர் மாதம் 8ஆம் நாளில் அன்னை மரியாவின் பிறந்த நாளை கொண்டாடுகின்றோம். **தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன், நீ பிறக்கும் முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன' (எரே 1:15)** என்று இறைவன் கருவிலேயே ஒவ்வொரு குழந்தையையும் திருநிலைப்படுத்தி அருளுக்குரிய குழந்தையாக ஆக்குகின்றார். அன்னை மரியாள் கருவாகி உருவானபோதே இறைவன் அவருக்குத் தனது அருளை நிறைவாக வழங்கினார்.

அன்னை மரியாளின் பிறப்பே ஒரு மிகப்பெரிய சிறப்பு. உலக மீட்பரை ஈன்றெடுப்பதற்கென்றே கடவுளால் அன்னை மரியாள் படைக்கப்பட்டாள். அன்னை மரியாவின் பிறப்பு ஒரு அற்புதமான ஒன்று. தூய கன்னி மரியாளின் பிறப்பு விழா நமக்குத் தெளிவுபடுத்துவது தாயின் அன்பையும், அரவணைப்பையும், ஆறுதலையும், அக்கறையையும், அர்ப்பணத்தையும், பரிந்து பேசுதலையும், பணிவிடை புரிதலையும், நிறைவு செய்வதையும்தான். இதை நாம் சிறப்பாக நினைவுகூர வேண்டும். இவை அனைத்தையும் ஒருங்கே பெற்றவள் மரியாள்.

நாம் அனைவருமே நமக்குத் தேவையானதை நமது தாயிடம் சென்றுதான் கேட்கின்றோம் ஏன்? அவள் இல்லை என்று சொல்வதில்லை. அதைப் போலதான் நமது அன்னை மரியாளும் நமக்கெல்லாம் தாயாக இருக்கிறாள். நாம் கேட்கின்ற அனைத்தையும் தன்மகனிடம் பரிந்து பேசி பெற்றுத்தருவாள். அன்னை மரியாள் நமக்குப் பலம், வற்றாத குளம், நலம் தரும் வரம்.

அனைவருக்கும் அன்னை மாயாவின் பிறப்பு நாள் வாழ்த்துக்கள்.

**உறவில் நிலைக்கும்,**
**அருள்பணி:போல் மத்தியு மதன்ராஜ் அ. ம. தி.**



## பணியகச் செய்திகள்



**தி**ருமண ஆயத்தம் பெற விரும்புவோர் 3 மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**03-07-2022 ஞாயிறு 9- 11:30 மணிவரை**
**01-10-2022 சனி 9 - 17:00 மணிவரை**
**திருமண அருட்சாதன வகுப்பு, பெல்வில் சிற்றாலயத்தில் நடைபெறும்.**

**தி**ருமுழுக்கு ஆயத்தம் பெற விரும்புவோர் ஒரு மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.



**வளர்ந்தோருக்கு - திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

யூலை: சனி 30ந் திகதி - 17:30-18:30
செப்: சனி 24ந் திகதி - 17:30-18:30

**சிறுவர்களுக்கு - திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

யூலை: புதன் 27ந் திகதி - 18:30 - 20:00
யூலை: சனி 30ந் திகதி - 18:30 - 20:00
செப்: புதன் 21ந் திகதி - 18:30 - 20:00
செப்: சனி 24ந் திகதி - 18:30 - 20:00

**பெல்வில் ஆலயத்தில் நடைபெறும்**

## விவிலிய பொது அறிவுப்போட்டி 76 பரிசு பெறுபவர்கள்

### ஆமோஸ்~ ஒபதியா நூல்

**1ம் பரிசு: திருமதி: யோண்சன் மேரி பீல்டா**
**2ம் பரிசு: திருமதி: சில்வெஸ்ரர் ஜெனீபா**

**ஏனையவர்கள்:**

1. திருமதி: யேசுதாசன் மேரி ஜொய்ஸ்
2. செல்வி: லூாசியா மேரி
3. திருமதி: பிறிம்றோஸ் டலஸ்
4. செல்வி: யோசவ் சியாமளா
5. திருமதி: யேசுதாசன் வேர்ஜினியா
6. திருமதி உசா கிருபாகரன்
7. திருமதி: கொன்சன்ரைன் கருணாமலர்
8. திரு: அருளப்பு கிறிஸ்ரியன்
9. திருமதி: கெலனா யோசவ்

**அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்**
**பணியக இயக்குனர்**

### ஆவணி - பணியகத் திருப்பலிகள்




### புரட்டாதி - பணியகத் திருப்பலிகள்



**03- 09-2022**
**குழந்தை தெரேசா திருவிழா**
**Senart பணித்தளவிழா**
17:00: chapelle notre dame de lourdes
77380 - Combs la Ville



**11-09-2022 பாரீஸ் பணித்தளவிழா**
**புனித கன்னி மரியாளின் பிறப்புவிழா**
11:30 Chapelle NDR. de Belleville
75011 - Paris



**18- 09-2022 SEVRANபணித்தளவிழா**
**அன்னை வேளாங்கன்னி திருவிழா**
17:00 Eglise St Martin de Sevron
93270 - Sevron




**25- 09-2022**
**மருதமடு அன்னை திருவிழா**
**Clichy Sous Bois பணித்தளவிழா**
14:30: Eglise Notre Dams des Anges
93390—Clichy Sous Bois

## இறைவார்த்தை

**தாவீதின் மகனும் இஸ்ரயேலின் அரசனுமாகிய சாலமோனின் நீதிமொழிகள்.**

இவற்றைப் படிப்பவர் ஞானமும் நற்பயிற்சியும் பெறுவர். ஆழ்ந்த கருத்தடங்கிய நன்மொழிகளை உணர்ந்து கொள்வர். நீதி, நியாயம், நேர்மை நிறைந்த விவேக வாழ்க்கையில் பயிற்சி பெறுவர். அறிவற்றோர் கூரறிவு பெறுவர். இளைஞர் அறிவும் விவேகமும் அடைவர். ஞானமுள்ளோர் இவற்றைக் கேட்டு அறிவில் இன்னும் தேர்ச்சியடைவர். விவேகிகள் அறிவுரை கூறும் திறமை பெறுவர்...

# திருக்கெழுத்து புதிர்

## போட்டி இலக்கம் 78

### இணைச்சட்டம் {1-34 அதிகாரங்கள்}

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | | | | 3 |
| | | | | 4 | | | 5 | 6 | |
| | | 7 | | | 8 | | | 9 | |
| | 10 | | | 11 | | 12 | 13 | | |
| 14 | | 15 | 16 | 17 | | | | | 18 |
| | 19 | 20 | ★ | 21 | | 22 | | 23 | 24 |
| | | | 25 | | 26 | | 27 | | |
| 28 | 29 | | 30 | 31 | | 32 | | 33 | |
| | | 34 | | 35 | | 36 | | 37 | |
| 38 | ★ | | | 39 | | | 40 | | 41 |

**இடமிருந்து வலம்**

1. ………. செய்ய வேண்டாம்.
2. ……….பாழையத்திற்கு வெளியே செல்லட்டும்
7. வாளுக்கு ………..யாக்குங்கள்.
8. ……….ப்புக் கூடாரத்துக்கு வாருங்கள்.
10. … …..யை உண்ணச் செய்வேன்.
13. … …..முழ அகலமும் கொண்டது.
14. மேகத்……..கூடாரத்தின் நுழைவாயிலில் நின்றது.
17. ……. மேல் சினம் கொண்டார்.
21. இன்று… ….. வழக்கில் உள்ளது.
27. பெண்ணிலும் ………. இராது.
32. இஸ்ராயேலில் இருந்து துடைத்து………
37. ஆண்டவரின் குரலுக்கு செவி……….
38. கோடரியால் ………..அழிக்காதே.
40. அவரது……..கள் மயங்கினதுமில்லை.

**வலமிருந்து இடம்**

2. ……..வானத்திலிருந்து உன்மேல் விழும்.
3. ஒர்……….படிக்கை செய்து கொண்டார்.
4. ஐம்பது………..க்காசுகள் தரவேண்டும்.
5. உரியவற்றை……….மையாக்கிக் கொள்வாய்.
11. உன் கையில்………..படைப்பார்.
15. ……….டைய நாள்களை நினைத்துப்பார்.
16. ரூப…. வாழட்டும். (ன், ண் என மாறியுள்ளது)
19. அது……….ணில் இல்லை.
23……….நிலத்தில் உங்களை உண்பித்தவர்.
26……யை உம் மக்கள் இஸ்ராயேல் மேல் சுமத்தாதேயும்.
27. உங்கள் நிலத்திற்கு……….. தருவார்.
34. ஆண்டவரை நோக்கி……….எழுப்பினோம்.
35. அதை நீ…………. விசாரி.
39. அங்கிருந்து……………வந்தார்.
41. அவரது……………..மயங்கினதுமில்லை.

**மேலிருந்து கீழ்**

1. கால்கள்…………இளைப்பாற இடம் இராது.
2. அவன் கடவுளுக்கு………..வில்லை.
3. வார்த்தை…………..மிக அருகில் உள்ளது.
4. …………..யிலே வாள், உள்ளே பேரச்சம்.
7…………..க் கேட்டு அஞ்சட்டும்.
8. அப்புறப்படுத்துபவர் ………..க்கட்டும்.
9. நிலம்……….பலனைத் தராது
12. ……..த்தனம் செய்தாள்.
13. பார்லி ஆகியவை நிறைந்த……….
14. அவன் ……………னான்.
19. உன்னை விட்டு……..க மாட்டார்.
20. ஆண்டவர் உனக்கு ஆசி……….வார்.
21. அவர் தம்……….கள் அனைத்தும் நீதியானவை.
22. ………..யின் அருகில் வையுங்கள்.
24. துடைத்து ……….
25. அந்த இறைவாக்கினன் ………….
26. தாழ்ந்து…………..கிடந்தேன்.
28. அனைத்தும் அவர்கள் ………… விழும்.
29. உன் வழி ……….பின் உள்ளத்தையும்,
34. நாட்டில் ……..யேறுங்கள்.

**கீழிருந்து மேல்**

5. ………. உள்ளத்தைக் கடினப்படுத்தாதே.
6. ஆண்டவருக்கு அஞ்சி…………
10. தாய்ப்பாலில் …………….வேண்டாம்
11. ஓடி ……….ந்தால்
14. தன் மகனைத் ………….ச் செல்வது போல
18. உன் ஆற்றல் ………. செயல்களுக்கு
22. தலைவர்கள் வீரர்களிடம் ………….
23. அது ……….ம் தேனும் நிரம்பி வழியும் நாடு
27. அதன் ………….களிலிருந்து எடுக்கலாம்.
31. பெருமழை பைந்தளிர் மீது ………..வது போல
33. ……….மனைவியரைக் கொள்ளலாகாது.
36. ஆண்டவரின் குரலுக்கு ……….கொடுக்கவுமில்லை
40. ஆண்டவர் ……… அவர்களை இகழ்ந்து ஒதுக்கினார்.
41. ஆண்டவருக்கு ………சினம் வரச் செய்யாதீர்கள்.

**குறுக்கெழுத்து போட்டியின் விடைகளை தயவு செய்து 05-09-2022 க்கு முன்பு பணியகத்திற்கு அனுப்பி வையுங்கள். நன்றி**






# ஓய்வு பெற்ற திருத்தந்தை 16வது பெனடிக்ட்

## பல இறையியல் நூல்களையும், மறைக்கல்வி நூல்களையும் எழுதியவர்

அவரது வாழ்வில் அவர் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பது சிறப்பானதாகும். ஜோசப் இரட்சிங்கர் 1927ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் திகதி ஜேர்மனியில் உள்ள பவாரியா என்ற நகரத்தில் அவதரித்தார். இவரது தந்தையார் பொலிஸ் அதிகாரியாகக் கடமையாற்றினார். தாயார் பிரபல விடுதி ஒன்றில் சமையல் செய்து வந்தார் (திருமணத்திற்கு முன்) இவரது மூத்த சகோதரர் ஜோர்ச், மூத்த சகோதரி மரியா இவர் குடும்பத்தின் மூன்றாவது கடைசி மகளாவார். இவர் பிறந்த மறுநாளே இவருக்குத் திருமுழுக்கு வழங்கப்பட்டது. (பெரிய சனி திருவிழிப்புச் சடங்கில்)





முதலில் இவரது சகோதரர் குருவானவராக விரும்பி குருமடத்தில் நுழைந்தார். அதேபோன்று பங்குத்தந்தையின் அழைப்பின்பேரில் இவரும் தமது 12 வயதில் 1939ம் ஆண்டு குருமடத்தில் சேர்ந்துகொண்டார். ஆனால் இவர் இணைந்த சில மாதங்களின் பின் இராணுவத்தினர் தங்குவதற்கான இடமாக குருமடம் தற்காலிகமாகப் பயன்படுத்தப்பட்டதினால், 1942ம் ஆண்டுவரை குருமடம் மூடப்பட்டது. எனவே அவர் தனது நண்பர்களோடு சேர்ந்து தத்தம் இல்லங்களுக்குச் சென்றார். இவரது 14வது பிறந்ததினம் கொண்டாடப்பட்ட வேளையில் 1941ம் ஆண்டு இவர் ஹிட்லரின் இளைஞர் ஒன்றியத்தின் அங்கத்தவராக இணைந்து கொண்டார். அக்காலத்தில் இளையோர் அனைவரும் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றக் கட்டாயமாகப் பணிக்கப்பட்டனர். எனவே இவரும் அப்படையில் சேர்ந்து பணியாற்றினார். ஆனால் ஒரு வருடத்தின் பின் இவரது குழுவினருக்கு வீடு செல்ல அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறு வரும் வழியில் அமெரிக்க இராணுவத்தால் கைது செய்யப்பட்டு பல மாதங்கள் கைதியாகச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டார். அங்கிருந்து விடுவிக்கப்பட்டு வரும் வழியில் மீண்டும் இராணுவத்தில் சேர கட்டாயப்படுத்தப்பட்டு 2ம் உலகப்போர் வரை இராணுவப் படையில் கடமையாற்றினார். பின்னர் 1945ம் ஆண்டு மே மாதம் இவரும், இவரது மூத்த சகோதரர் ஜோர்ச்சும் மீண்டும் குருமடத்தில் இணைந்து கொண்டனர்.

குருமடத்தில் சிறந்த மாணவனாகத் திகழ்ந்த ஜோசப் தன்னுடைய ஆய்வுக் கட்டுரைக்காக தூய அகஸ்ரஸ் பற்றி எழுதினார். ஐரோப்பாவின் பாதுகாவலரான தூய பெனடிக்ட் மட்டில் ஆழமான பக்தி கொண்டவராகவும் காணப்பட்டார். இதன் மூலம் இவரது வாழ்வும் மாற்றம் அடைந்தது. எளிமையும், சாந்தமும் உருவானவராகக் காணப்பட்டார். 1951ம் ஆண்டு சகோதரர்கள் இருவரும் குருவாகத் திருநிலைப்படுத்தப் பட்டனர். இவரது மூத்த சகோதரன் அருட்தந்தை ஜோர்ச் இரட்சிங்கர் இன்னும் வாழ்ந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. 1959 – 1966 வரையான காலப்பகுதியில் பல பல்கலைக்கழகங்களில் இறையியல் கற்பிக்கும் இறையிய லாளராகத் திகழ்ந்தார். இக்காலகட்டத்தில் கூட்டப்பட்ட இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் முக்கிய இறையியலாளராகச் செயற்பட்டார். **(Chief Thological expert)** எனவே பழைமை போற்றும் அதே வேளை, புதியன தோன்றுவதற்கு ஏதுவான ஒருவராக புதுப்பித்தலுக்கு உந்து சக்தியாக திகழும் ஒருவராக அன்று திருச்சபையில் செயற்பட்டார்.

1977ம் ஆண்டு திருத்தந்தை 6ம் சின்னப்பரினால் மியூனிக் நகரப் **(Munich)** பேராயராக நியமனம் செய்யப்பட்டார். இரண்டு **Conclane** இல் பங்கு பற்றிய கருதினாலாக இவர் காணப்பட்டார். (1978ம் ஆண்டும், 2005ம் ஆண்டும்) 1981ம் ஆண்டு இவரின் தலைமைத்துவத்தையும் ஈடுபாட்டையும் கண்ட திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் இவரை வத்திக்கான் செயலகத்தின் தலைவராக நியமித்தார். 1998ம் ஆண்டு இவரைக் கருதினால் குழுவிற்கு உப தலைவராக நியமித்தார். **(Vice-Dean of Collage of Cardinals)** பின்னர் 2002ம் ஆண்டு கருதினால் குழுவின் தலைவராக நியமனம் பெற்றார். **(Dean of College of Cardincal)** இறுதியாக 2005ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி திருச்சபையின் 265வது திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்பட்டார். அதன்பின் ஜோசப் இரட்சிங்கர் என்ற பெயர் மறைய 16வது பெனடிக்ட் என்ற தனக்குப் பிடித்தமான பெயரைச் சூடிக் கொண்டார்.

1000 வருடங்களின் பின் தெரிவான முதலதாவது ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த திருத்தந்தையாகவும், 500 வருடங்களின் பின் தெரிவான இத்தாலி நாட்டைச் சாராத 2வது திருத்தந்தையாகவும் இவர் காணப்படுகின்றார். 1415ம் ஆண்டுக்குப் பின் (திருத்தந்தை 12வது கிரகோரி) பதவி விலகிய முதலாவது திருந்தந்தையாகவும் இவர் காணப்படுகின்றார். (600 வருடங்களின் பின்) இவரது பதவி ஏற்பு விழா 2005ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் திகதி வத்திக்கானிலுள்ள தூய பேதுரு சதுக்கத்தில் இடம்பெற்றது. திருச்சபையின் காவல்காக்கும் விழிப்பு நாய் **(Watch Dog of the Church)** என்று அழைக்கப்படுகின்றார். திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் வாழ்வைப் பின்பற்றி வாழுகின்றவரும் இவரேயாவார். பல இறையியல் நூல்களையும், மறைக்கல்வி நூல்களையும் எழுதியவர் இவரேயாவார். இவர் 2ம் வத்திக்கான் சங்கத்தில் செயற்பட்ட இறையியலாளர்களில் முக்கிய பங்கு வகித்தவராக இவர் காணப்படுகின்றார். அதுமட்டுமல்லாது வேதாகமத்தின் பொதுமொழி பெயர்ப்பு உருவாக்கம் பெறுவதற்கு முக்கிய காரண கர்த்தாவாக இருந்தவரும் இவரேயாவார். இன்னும் கூறப்போனால் உலக கத்தோலிக்க மறைக்கல்வி நூலின் தோற்றத்திற்கும் முக்கிய காரணம் இவரேயாவார். **(Catechism of the Catholic Church)**

# பரிந்துரைக்கும் தாயிடத்தில் பரிவிரக்கம் செய்திடுவோம்

மண்ணுலகில் மானிடராய் மகன் இயேசுவைத் தந்ததனால்
மகத்தான பணிசெய்த மரியா நற்பேறு பெற்றார்.!
விண்ணுலகில் வீற்றிருக்க வெற்றியன்னை தகுதி பெற்றார்.!
விழித்திருந்து செபித்திடுவோம் வேதனைகள் அழிந்துவிடும்.!
கண்ணெதிரே காண்கின்ற காட்சிகளைக் கொண்டு நாம்,
காரியங்கள் ஆற்றுவதால் கனகுற்றம் செய்கின்றோம்!
பண்ணெடுத்தல் பாடிடுவோம் பாதகத்தைச் சாடிடுவோம்.
பரிந்துரைக்கும் தாயிடத்தில் பரிவிரக்கம் செய்திடுவோம்!

என்ன குறை நமக்கு என்பதனை எண்ணிடுவோம்,
எப்போதும் அவை நீங்க இறைத்தாயை வேண்டிடுவோம்.!
அன்னம் நமக்கிருக்க அடுத்தவரை நினைத்திடுவோம்,
அள்ளி அதனைநாம் அகமலர்ந்து அக்களிப்போம்!
மின்னல் போல் வரும் மேதினச் சோதனைகள்,
மேல்மிதித்து என்னாளும் மெய்மறையைக் காத்திடுவோம்!
மின்னல் போல் வந்து பிணைக்கும் பிரச்சினைகள்,
பேரோட்டம் பெற்றிடவே பிழை மறந்து செயல்படுவோம்.!

அனைத்துக்கும் மாதிரியாய் அன்னைமரி இருக்கையிலே,
ஆர்வமாய் அவர்வாழ்வை ஆராயத் தொடங்கிடுவோம்!
நினைத்தது நடக்கும் என்ற நினைவினை வளர்த்திடுவோம்,
நிச்சயமாய் அவர் நமக்கு நெடுவாழ்வைத் தந்திடுவார்!
முனைந்தே செயல்பட்டால் முன்னேற்றம் நமதாகும்.,
மூவொரு இறைதுணையால் முழுவாழ்வும் ஒளியைப்பெறும்.!
வினைகள் இடம்பெயரும் வெற்றி நமைத்தொடரும்,
வியாகுலத்தாய் அருளாலே வியப்புற வாழ்ந்திடுவோம்!

பெற்ற அன்பைப் பிறரோடு பகிர்ந்திடுவோம்.
பேணி நற்பண்பை பெருகச் செய்திடுவோம்!
நல்வாழ்வை கனிவுடன் காட்டிடுவோம்.
கருணை மழை பொழிந்து காரிருளை ஒட்டிடுவோம்.!
உற்ற தாய்நமக்கு உறவாக வருகின்றார்.
உடனேறும் உறவுகளை உளமாற நேசிப்போம்.
மற்ற மாந்தருக்கு மாதிரியாய் வலம் வருவோம்.
மாதா துணை வருவாள் மனமாற நம்பிடுவோம்.!

அருள்வாழ்வை இன்று நாம் அவசரமாய் தேடிவிட்டால்,
அகிலத்தில் வெற்றிக்கொடி அறநெறியில் நாட்டிடலாம்.!
பொருள்வாழ்வும் நமைப்போர்த்தும் புனிதமும் குடியிருக்கும்!
புவியினர் நமைப் பார்த்து புளங்காகிதம் அடைந்திடுவர்.
இருள் வாழ்வை நேசித்தால் இடம்பெயரும் நம்சொத்து,
எச்சரிக்கை! இதயத்தில் ஏற்றுவோம் ஒளியை!
உருளும் உலகமிது உற்றுநோக்கக் கற்றிடுவோம்.
உலகத்தால் அருள்பெற்று உவகையைப் பெற்றிடுவோம்.

மறையாசிரியர் தி.ம. சந்தியாகு,
வேங்கிடக்குளம் இந்தியா

இன்று இருக்கும் கருதினால்மார்களில் (College of Cardinals) 67 கருதினால்மார்கள் இவரால் அபிசேகம் செய்யப்பட்டவர்கள், ஏனையோர் அனைவரும் திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பரினால் அபிசேகம் செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

2010ம் ஆண்டிலே ஒரு தடவை ஆங்கிலத்திலே செவ்வி ஒன்றை வழங்கிய திருத்தந்தை 16வது பெனடிக்ற் "எதிர்காலத்தில் திருச்சபையின் பழைமையைப் பேணும் அதே வேளை, அதை பாதுகாப்பதும் எனது கடமை. ஆனால் அவ்வாறு செயற்பட முடியாவிட்டால், பதவி விலகி புதியவர் ஒருவருக்கு இடம் கொடுப்பது பற்றி சிந்திப்பேன்" என்று குறிப்பிட்டார். எனவே இன்று குறிப்பிடுவது போன்று அவரது இந்த முடிவு இன்று தோன்றியது அல்ல மாறாக, முன்கூட்டியே இது பற்றிச் சிந்தித்திருக்கின்றார்.

ஓய்வு பெற்று பதவி விலகிய திருத்தந்தை 16வது பெனடிக்ட் சிகப்புநிற சப்பாத்தை இப்போது அணிவது இல்லை. அதற்குப் பதிலாக மெக்சிக்கோ நாட்டினால் அவருக்கு அன்பளிப்புச் செய்த பிறவுன் நிற சப்பாத்தையே இப்போது அணிகின்றார்.

2013ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ம் திகதி தூய பேதுரு சதுக்கத்தில் மக்களைத் தரிசித்து உரையாற்றினார். அவ்வேளை இதுவரை காலமும் அவரது பணிக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி கூறினார். அதுமட்டுமல்லாது திருச்சபை என்பது ஒரு நிறுவனம் அல்ல, மாறாக அது கிறிஸ்துவின் வாழும் உடல். அது தூய ஆவியால் வழிநடத்தப்படுகின்றது என்று குறிப்பிட்டார். இன்று உலகிலே காணப்படும் உலகத் தலைவர்களுக்கு எல்லாம் ஒரு எடுத்துக் காட்டான செயற்பாட்டை ஓய்வு பெற்ற, பதவி விலகிய திருத்தந்தை செய்து காட்டியுள்ளார். உயிர் வாழும் காலம் வரை பதவியில் இருக்கவேண்டும் என்று சாதித்துக் கொண்டிருக்கும் தலைவர்களுக்கு திருத்தந்தை 16வது பெனடிக்ட் ஒரு எடுத்துக் காட்டு.

சிரி.....சிரி.....சிரி....



**ஆசிரியர்:** எவன் ஒருவனால் ஒரு விசயத்தை மற்றவர்களுக்கு புரிய வைக்க முடிய வில்லையோ அவன் ஒரு முட்டாள்...

**மாணவர்கள்:** ஒண்ணும் புரியல சார்............



## விவிலிய அறிவுப்போட்டி - 77




1) ஆண்டவர் சினங்கொள்வது சரியா என்று யாரிடம் கூறினார்?
2) யோனாஸ் எந்த மாநகருக்குச் சென்று இன்னும் 40 நாட்களில் எந்த நகர் வீழ்த்தப்படும் என்று அறிவித்தார்?
3) தூக்கத்தில் இருந்த யோனாசை எழுப்பி எழுந்திரு, உன் கடவுளைக் கூவி மன்றாடு என்று யாரால் கேட்கப்பட்டது?
4) யோனாஸ் எந்த நாட்டிற்கு தப்பியோடிப்போக எண்ணினார்?
5) யோனாஸ் நகரத்திலிருந்து வெளியேறி எங்கே போய் தங்கினார்?
6) யோனாஸ் பெரிய மீன் வயிற்றில் எத்தனை நாட்கள் இருந்தார்?
7) நினிவே மக்களுடன் நினிவே மன்னனும் கோணியுடுத்தி எங்கே அமர்ந்தனர்?
8) யோனாசின் தலைக்கு மேல் வளர்ந்த செடியின் பெயர் என்ன?
9) யோனாசின் தந்தை பெயர் என்ன?
10) மனிதனோ, மிருகமோ ஆடுமாடுகளோ எதையும் சுவைத்தலாகாது என்று கட்டளையிட்டவர் யார்?

## விவிலிய பொது அறிவுப்போட்டி முடிவுகள் - 76

**பதில்கள் ஆமோஸ் நூல்)**

1. ஆண்டவரின் வாக்கு கிடைக்காத பஞ்சமே அது. 8:11
2. அஸ்மா தெய்வத்தின் பெயரால் 8:14
3. என் மக்களாகிய இஸ்ரயேலை முன்னைய நன்னிலைக்குக் கொண்டுவருவேன். அவர்கள் பாழடைந்த நகர்களைத் திரும்பக் கட்டி அவற்றில் குடியேறுவார்கள். திராட்சைத் தோட்டங்களை அமைத்து அவற்றின் கனிரசத்தை அருந்துவார்கள். 9:14
4. தமஸ்கு நகர் 1:3, காசா 1:6, தீர் 1:9
5. என்னைத் தேடுங்கள் நீங்கள் வாழ்வீர்கள் 5:4
6. அது ஒளிமிக்க நாளன்று அது இருள் சூழ்ந்த நாளாகத்தானிருக்கும். 5:18
7. நீதி வெள்ளமென பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக! 5:24

**ஒபதியா**

8. தப்பிப் பிழைத்தோர் சீயோன் மலையில் இருப்பர் சீயோன் மலையும் தூய்மையாய் இருக்கும் யாக்கோபின் குடும்பத்தார் தங்கள் உரிமைச் சொத்தைத் திரும்பப் பெறுவர். 1: 17
9. பெனீசியாவிலிருந்து சாரிபாத் வரை உள்ள நாட்டில் 1:20
10. உன்னோடு உறவாடியவர்கள்..........உன்னோடு உண்டவர்களும், நல்லுறவு கொண்டவர்களும் 1:7






புதிய ஏற்பாடு (New Testament) அல்லது கிரேக்க விவிலியம் என்பது கிறிஸ்தவர்களின் புனித நூலான விவிலியத்தின் இரண்டாவது பகுதியாகும். முதல் பகுதி பழைய ஏற்பாடு என்று அழைக்கப்படுகிறது. ஏற்பாடு என்னும் சொல் உடன்படிக்கை, ஒப்பந்தம் என்று பொருள்படும். கடவுள் பண்டை நாட்களில் தமக்கென ஒரு மக்களினத்தைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்குத் தாம் கடவுளாக இருப்பதாகவும், அவர்கள் தமக்கு நெருக்கமான மக்களாக வாழ்ந்து, தம் கட்டளைகளைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்றும் அவர்களோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார் என்று யூத மக்களும் கிறிஸ்தவ மக்களும் நம்புகின்றனர்.

இந்த ஒப்பந்தத்தைக் கிறிஸ்தவர்கள் பழைய உடன்படிக்கை என்று அழைக்கின்றனர். ஏனென்றால் கடவுளின் மகனே இவ்வுலகில் இயேசு என்னும் மனிதராகப் பிறந்து, துன்பங்கள் அனுபவித்து, சிலுவையில் அறையுண்டு இறந்தார் என்றும், சாவை வென்று உயிர்பெற்றெழுந்தார் என்றும் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். இயேசுவின் சாவு மற்றும் உயிர்த்தெழுதல் வழியாகக் கடவுள் மனித குலம் முழுவதோடும் ஒரு புதிய உடன்படிக்கையைச் செய்து கொண்டார் என்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கை.

எனவே, யூதர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், கிறிஸ்துவின் காலத்திற்கு முற்பட்டதுமான புனித நூல் தொகுப்பைக் கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாடு என்பர். கிறிஸ்துவின் காலத்திலும் அவர் இறந்த ஒரு நூற்றாண்டுக்குள்ளும் எழுதப்பட்ட புனித நூல்தொகுப்பு புதிய ஏற்பாடு என்று வழங்கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டைப் போலவே புதிய ஏற்பாடும் பல நூல்கள் அடங்கிய தொகுப்பு ஆகும். இது பல எழுத்தாளர்களாலும் குழுமங்களாலும் கி.பி. 45க்குப் பின்னும் கி.பி. 140க்கு முன்னும் எழுதப்பட்டு சிறுக சிறுக சில நூற்றாண்டுகளாக ஒன்று சேர்க்கப்பட்டு, கிறிஸ்தவ திருச்சபையால் அதிகாரப் பூர்வமாக ஏற்கப்பட்டது. விவிலியத்தின் பகுதியாக இந் நூல்கள் கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்தே ஏற்கப்பட்டன. 397இல் கார்த்தேசு (Carthage) நகரில் நடந்த சங்கத்திலும், பின்னர் திரெந்து சங்கத்திலும் (கி.பி. 1546) இவை விவிலியத் திருமுறை நூல்களாக அதிகாரப் பூர்வமாக ஏற்கப்பட்டன. புதிய ஏற்பாட்டின் மூல பாடம் (செப்துவசிந்தா) என்னும் கிரேக்க விவிலியத்தில் உள்ளது. தொடக்க காலத்திலிருந்தே விவிலியம் இலத்தீன் மொழியில் பெயர்க்கப்பட்டது. பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் கிறித்தவத்தின் அடிப்படையாகும். புதிய ஏற்பாடு இயேசுவின் பிறப்புடன் ஆரம்பித்து, அவருடைய போதனைகளையும் அவர் புரிந்த அதிசய செயல்களையும் எடுத்துரைப்பதோடு, அவருடைய சாவு, உயிர்த்தெழுதல் ஆகியவற்றையும் விளக்குகிறது. தமது போதனையை எல்லா மக்களுக்கும் அறிவிக்க இயேசு தம் சீடர்களை திருத்தூதர்களை அனுப்பினார். பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் அடங்கிய திருவிவிலியம் என்னும் நூல் தொகுதி கிறித்தவ இறையியல் படிப்பின் ஆதாரமாகத் திகழ்கிறது. **தொடரும்**

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 77 வெற்றியாளர்கள்



### எண்ணிக்கை நூல் (1-20)

1) **திருமதி: சில்வெஸ்ரர் ஜெனீபா**
2) **திரு: அருளப்பு கிறிஸ்ரியன்**
3) **திருமதி: யேசுதாசன் வேர்ஜினியா**

1) செல்வி: யோசவ் சியாமளா
2) திருமதி: பிறிம்றோஸ் டலஸ்
3) செல்வி: லுசியா மேரி
4) திருமதி: யேசுதாசன் ஜொய்ஸ்
5) திருமதி: கெலனா யோசவ்
6) திருமதி உசா கிருபாகரன்
7) திருமதி: கொன்சன்ரைன் கருணாமலர்

## எமது புனிதர் தேவசகாயத்தின் பல்வேறுபட்ட இடங்கள்



பிறந்த இடம்: நட்டாலம்



பத்மநாபபுரம் அரண்மனை



திருமுழுக்கு பெற்ற இடம் வடக்கன் குளம்



டிலனோய் கல்லறை உதயகிரி கோட்டை



அற்புத நீரூற்று புலியூர் குறிச்சி



பட்டமரம் தளிர்விட்டு நிழல் கொடுத்த பெருவிளை

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி 77 சரியான பதில்கள்

**எண்ணிக்கை நூல் - 1 - 20**

**இடமிருந்து வலம்**

1. இருபது 14:29
2. சின் 13:21
3. உனக்கு 6:26
4. குட்டி 6:14
6. வயதும் 8:24
7. போடுவார் 5:17
8. அவ்வாறே 7:6
10. வயது 8:25
11. கூடார 10:3
12. சபையை 10:7
13. ஐந்நூறு 1:21
14. கால்நடை 3:41
16. அங்கே 11:35
17. கேலோன் 1:9
19. மக்கள் 9:17
20. வயிறு 5:21
22. சட்டம் 5:29
24. விழும் 11:31
26. வராது 5:28

**வலமிருந்து இடம்**

3. உன் 6:25
5. மூடி 16:33
8. அவர் 7:19
10. வராது 6:12
11. கூடாது 9:12
14. காத்து 1:14
16. அழுது 11:4
18. முதல் 4:3
20. வலிய 14:12
21. மேகம் 12:10
25. ஆராத்தி 5:25

**மேலிருந்து கீழ்**

1. இப்போது 14:41
9. நாளில் 9:15
18. முப்பது 4:3
19. மனைவி 5:29

**கீழிருந்து மேல்**

4. குரு 5:30
5. மூசி 3:20
8. அவன் 8:13
9. நான்கு 7:8
14. காத்து 1:24
15. துணிந்து 15:30
18. முதல் 1:18
19. மது 6:3
23. ஆறு 11:21
25. ஆடவன் 5:31

## சிறுவர்களுக்கான விவிலிய வினா - 83



1) கடவுள் முதல் நாளில் என்ன நடந்தது ?
2) கடவுள் இரண்டாம் நாளில் என்ன படைத்தார்?
3) கடவுள் மூன்றாம் நாளில் என்ன படைத்தார்?
4) கடவுள் நான்காம் நாளில் என்ன படைத்தார்?
5) கடவுள் ஐந்தாம் நாளில் என்ன படைத்தார்?
6) கடவுள் ஆறாம் நாளில் என்ன படைத்தார்?
7) கடவுள் ஏழாம் நாளில் என்ன படைத்தார்?
8) மனித படைப்பின் சிறப்பு என்ன?
9)கடவுள் மானிடரை தனது உருவிலும் சாயலிலும் படைத்தார் என்பதன் பொருள் என்ன?
10) கடவுள் மானிடருக்கு எவ்வாறு ஆசி வழங்கினார்?

## சிறுவர்களுக்கான ஒன்று கூடல்



பெல்வில் சிற்றாலயத்தில் நேரம்: 9:00க்கு

03-07-2022


ஆகஸ்ட் ஒன்றுகூடல் நடைபெறாது

04-09-2022



# புனிதர் தேவசகாயம் பிள்ளை (தை 14)

அருட்பணி. ஜெயக்கொடி



**“வாழ்வது ஒரு முறை வாழ்த்தட்டும் தலைமுறை”** என்ற சொல்லாடலை தன் வாழ்வாக கொண்டு வாழ்ந்தவர் எம் மண்ணின் மறைசாட்சி தேவசகாயம். எல்லா தலைமுறையும் பேறுபெற்றவர் என்று வாழ்த்துகின்ற விதத்தில் தன் வாழ்வை அமைத்துக் கொண்டவர்.

வாசுதேவன் நம்பூதிரிக்கும் தேவகி அம்மையாருக்கும் மகனாக 1712-ஆம் ஆண்டு மகனாக இந்து சமயத்தில் நாயர்குலத்தில் பிறந்தவர். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் நீலகண்டன். சிறுவயது முதலே தன் சமயத்தின்மீது பற்றுக்கொண்டு எல்லா தெய்வங்களுக்கும் படையல் வைத்து வழிபட்டவர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் புலமை பெற்றவர். இது தவிர்த்து வில்வித்தை, வர்மக்கலை மற்றும் போர் பயிற்சியும் மிகச் சிறப்பாக கற்று தேர்ந்தவர்.

திருவிதாங்கூர் மன்னரின் சமஸ்தானத்தில் ஒரு சாதாரண படைவீரராக தன் வாழ்வை தொடங்கிய நீலகண்டன், பின்னாளில் தன்னுடைய புலமையாலும், அறிவாற்றலாலும், பத்மநா3.210021பபுரம் நீலகண்டசுவாமி திருக்கோவிலின் அதிகாரியாக அமர்த்தப்பட்டார். இவருடைய நேர்மையான செயல்பாட்டால் கவர்ந்திழுக் கப்பட்ட திருவிதாங்கூர் மன்னர் நீலகண்டனை தன்னுடைய கருவூல அதிகாரியாக அவரை நியமித்தார்.

1741-ஆம் ஆண்டு டச்சு நாட்டைச் சேர்ந்த கடற்படை தலைவராக விளங்கிய எஸ்தாக்கி டிலனாய், குளச்சல் போரில் தோல்வியை தழுவிய நிலையில் கைதிகளாக டிலனாய் மற்றும் பல படைவீரர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். டிலனாயில் ஒவ்வொரு செயல்களும் திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மாவுக்கு நிறைவையும் நம்பிக்கையும் கொடுத்தது. அதன் பயனாக பின்னாளில் மன்னிப்பு வழங்கப்பட்டு திருவிதாங்கூர் படையில் இணைந்து அதனை வழிநடத்தும் பொறுப்பை ஒப்படைத்தார்.

உதயகிரி கோட்டை எஸ்தாக்கி டிலனாய் தலைமையில் 1741 முதல் 1745 காலகட்டத்தில் நவீனமயமாக்கப்பட்டது. கருவூல அதிகாரியாக செயல்பட்ட நீலகண்டன் டிலனாயோடு பழகும் வாய்ப்பு கிடைத்தது. இருவரும் நண்பர்களாக மாறினர். இக்காலகட்டத்தில் மேக்கோடு பகுதியை சேர்ந்த பர்கவியம்மாள் என்ற நாயர் குல பெண்ணை திருமணம் செய்து கொண்டார்.

1744-ஆம் ஆண்டளவில் நீலகண்டன் தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும் ஏராளமான துன்பங்களை அனுபவித்து வந்தார். இந்நிலையில் அவர் மிகவும் சோகமாக மனமுடைந்த நிலையில் இருந்ததை கண்ணுற்ற டிலனாய், வாழ்வின் சோகங்களுக்கான காரணங்களை கேட்டறிந்தார். “ஏராளமான உயிரினங்கள் திடீரென இறந்துபோயின. குடும்பத்தில் ஏராளமான துன்பங்கள். இவை அனைத்திற்கும் தெய்வத்தின் கோபம் எங்கள் குடும்பத்தின்மீது வந்துள்ளது” என புலம்பினார்.

### மனமாற்றமும் திருமுழுக்கும்

மனித வாழ்வில் எப்போது மாற்றங்கள் வரும் என்பது யாரும் உறுதிபட சொல்ல முடியாது. நீலகண்டனின் எல்லா துன்பங்களையும் துயரங்களையும் கேட்டறிந்த டிலனாய், விவிலியத்திலிருந்து யோபுவின் வாழ்வில் ஏற்பட்ட எல்லா துன்பங்களையும் கடவுளின் அளவில்லா அன்பு அவரை காத்து வழிநடத்தியதையும் எடுத்து சொன்னார்.

டிலனாயின் வார்த்தைகளினால் வசீகரிக்கப்பட்ட நீலகண்டன் சத்திய மறை யை முழுமையாக நம்பினார். கிறிஸ்தவ நம்பிக்கையினால் தூண்டப்பட்டு கிறிஸ்தவராக மாற தனது விருப்பத்தை தெரிவித்து திருமுழுக்கு பெற விரும்பினார். எனவே வடக்கன்குளத்தில் இருந்த அருட்பணி. ஜியோவானி பட்டிஸ்டா புட்டாரி சே.ச. அவர்களிடம் திருமுழுக்கு பெற டிலனாய் பரிந்துரை கடிதம் ஒன்றை நீலகண்டனிடம் கொடுத்து அனுப்பினார்.

வடக்கன்குளம் சென்ற நீலகண்டன் அருட்பணி. புட்டாரி அவர்களை சந்தித்து தான் கிறிஸ்தவராக மாறி உடனடியாக திருமுழுக்கு பெறவேண்டும் என்ற விருப்பத்தை முன் வைத்தார். ஆனால் நீலகண்டன் உயர் குலத்தை சார்ந்தவராகவும், உயர் பதவியில் இருந்ததாலும் கத்தோலிக்க நம்பிக்கையை ஏற்றுக் கொள்வதால் உயிருக்குகூட உத்தரவாதம் இருக்க முடியாது என அருட்பணி. புட்டாரி உணர்ந்திருந்த தால் அவருக்கு திருமுழுக்கு கொடுக்க காலம் தாழ்த்தி கிறிஸ்தவ மறையை நன்கு கற்றறிய சொன்னார்.

ஏறக்குறைய ஒன்பது மாதங்கள் வடக்கன்குளத்தில் தங்கி கிறிஸ்தவ மறையை சிறப்பாக கற்றறிந்தார். உயர்குலத்தைச் சார்ந்த ஒருவர் கிறிஸ்தவராக மாறுகின்றபோது சமூகத்திலிருக்கின்ற உயர் மதிப்பை இழக்க நேரிடும். ஏனெனில் தொடக்க நிலையில் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை தழுவியவர் கள் சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்கள். நீலகண்டன் தன்னை தாழ்த்திக் கொள்ள தயங்கவில்லை.

### திருமுழுக்கு பெறுதல்

அருட்பணி. புட்டாரி நீலகண்டனின் நம்பிக்கை வாழ்வை கண்டு அதிசயித்து போனார். ஏனெனில் திருமுழுக்கு பெறுகின்ற ஆசை மட்டுமல்ல தான் ஏற்றுக் கொள்ள இருக்கின்ற நம்பிக்கைக்காக இரத்தத்தை சிந்தும் அளவுக்கு அதிக அளவு கத்தோலிக்க நம்பிக்கையில் வேரூன்றியிருந்தார். இதனை கண்ணுற்ற புட்டாரி சுவாமிகள் நீலகண்டனின் 32-ஆவது வயதில் மே மாதம் 14-ஆம் 1745-ஆம் ஆண்டு திருமுழுக்கு கொடுத்தார். தாயக-மாக்கல் கொள்கையினால் கவரப்பட்ட சேசு சபை மறை பணியாளர்கள் தமிழ் மீது கொண்ட தணியாத தாகத்தினால் “தேவசகாயம்” என அவருக்கு பெயர் சூட்டினர். (விவிலியத்தில் “லாசர்” என்பது தமிழில் தேவசகாயம் என மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.)

தொடரும்....



மறைசாட்சி தேவசகாயம் ஒரு சகாப்தம்

# இறை இரக்கம்



உலக ஆரம்பத்திலிருந்தே இறைவன் மக்கள் மீது தாம் கொண்டுள்ள இரக்கத்தை வெளிப்படுத்திவந்துள்ளார். பழைய ஏற்பாடு வரலாற்று நிகழ்சிகள் மூலமும் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துநாதர் மூலமும் இறைவனின் இரக்கம் வெளிப்படுகின்றது. ஆண்டவரை அன்புசெய்கிறவர்களுக்கு அவரது இரக்கம் தலைமுறை தலைமுறையாய் உள்ள தென்று தேவதாய் தனது கீதத்தில் கூறுகிறார்.

சமீப காலத்தில் பாவிகளுக்குத் தமது நித்திய அன்பின் புதுத் தன்மைகளை அறிவித்து இறைஇரக்கத்தின் பக்தியை ஏற்படுத்த ஆண்டவர் பல அடியார்களுக்கு காட்சி தந்துள்ளார். இறை இரக்கத்தின் பக்தியைப் பரப்பும் பணி சகோதரி பவுஸ்தீனாவிடம் விசேசமாக அளிக்கப்பட்டது.

திருமதி: லதா ரூபன்

### தூய மரிய பவுஸ்தீனா கோவால்ஸ்கா

பிப்ரவரி 22– 1931 அன்று, இந்தத் தேதியில் நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்து இந்த எளிய கன்னியாஸ்திரிக்கு தோன்றி, அனைத்து மனிதகுலத்திற்கும் இரக்கத்தின் அற்புதமான செய்தியைக் கொண்டு வந்தார். புனித ஃபாஸ்டினா தனது நாட்குறிப்பில் கூறுகிறார்: இன்று மாலை வேளையில், நான் என் அறையில் இருந்தபோது, வெண்ணிற ஆடை அணிந்திருந்த ஆண்டவராகிய இயேசுவைக் கண்டேன். அவரது ஒரு கரம் ஆசீர்வதித்தபடி உயர்த்தியும், மற்ற கரம் மார்பின் ஆடை பகுதியைத் தொட்டபடியும் இருந்தது. மார்பு ஆடையின் திறப்பிலிருந்து இரண்டு பெரிய ஒளிக்கதிர்கள், ஒன்று சிவப்பு நிறத்திலும் மற்றது வெளிர் நிறத்திலும், வெளிவந்தன. நான் மௌனமாக ஆண்டவரைப் பார்த்த வண்ணம் அப்படியே ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்தேன். என் ஆன்மா பயம் கலந்த மகிழ்ச்சியில் நிறைந்திருந்தது. சிறிது நேரத்திற்குப் பின் இயேசு என்னை நோக்கி: ‘ நீ இப்போது காணும் இந்த உருவத்தை, “ இயேசுவே! நான் உம்மை நம்புகின்றேன்” என்ற சொற்களோடு அப்படியே வரைந்திடு. ’ என்றார்.

இரக்கத்தின் அரசரான இயேசு, இவருக்குப் பலமுறை காட்சி தந்தார். இக்காட்சிகள் 1930லிருந்து 1938 வரை நீடித்தன. இறை இரக்கத்தின் பக்தியை குறித்து இயேசு அவருக்கு பல அறிவுரைகள் கூறினார். தமது வார்த்தைகளை பவுஸ்தீனா அவர்களின் கையேட்டில் எழுதிக்கொள்ளுமாறு பணித்தார். அவர்களது 600 பக்கங்களை கொண்ட நாட்குறிப்பிலிருந்தே இக்காட்சிகள் பற்றிய பல தகவல்களை அறியக் கூடியதாய் இருக்கிறது. ஏனெனில் தமது ஆன்ம குருவையும் மடத் தலைவியையும் தவிர வேறொருவருக்கும் அவர் காட்சிகள் பற்றிய செய்தியை அறிவிக்கவில்லை. இந்த நாள் குறிப்புகள் ஆங்கில, இத்தாலிய, ஜெர்மன், இஸ்பானிய, பிரஞ்சு, அரேபிய, ரஷ்ய, உரூமேனியா, செக், ஸ்லோவாக்கிய, மலையாளம், கன்னட, தெலுங்கு, ஹிந்தி, தமிழ் இன்னும் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.




தமது 33ஆம் வயதில் கிராக்கோ எனும் ஊரில் 1938 ஆம் ஆண்டு அக்டோபர் 5ம் நாள் இறைவனடி சேர்ந்தார். 1966ம் ஆண்டு அவரது உடல் தோண்டி எடுக்கப்பட்டு மடத்துக் கோவிலில் வைக்கப்பட்டுள்ளது. அப்போது போலந்தில் கருதினாலாக இருந்த கரோல் வைத்தீவோ (பின்நாளில் திருத்தைந்தை 2 ஜான் பவுல்) 1968ல் முத்திப் பேறுபட்டத்திற்கான அலுவலை ஆரம்பிக்க அனுமதி வழங்கினார். 1993 ஏப்பல் 18ஆம் நாள் திருத்தைந்தை 2 ஜான் பவுல் முத்திப் பேறுபெற்றவர் என அறிவித்தார். பின்னர் 2000 ஆண்டு ஏப்ரல் 30 நாள் திருத்தைந்தை 2 ஜான் பவுல், சகோதரி மரிய பவுஸ்தினாவை "புனித மரிய பவுஸ்தீனா கோவால்ஸ்கா" வாக அறிவித்தார். **முற்றும்**

## பாத்திமா மாதா திருவிழா
## நெயூலி சுர் மார்ன் பணித்தலவிழா
## 08-05-2022









## புதிர் தோட்டம் 83

1.மரமுண்டு அடுப்பெரிக்க உதவாது சீப்புண்டு தலை வார முடியாது, பூவுண்டு கொண்டைக்கு உதவாது.

2. குடிக்க உதவாத நீர், குளத்தில் தங்காத நீர், கைகளால் தொடாத நீர்.

3. ஆனை விரும்பும், சேனை விரும்பும், அடித்தால் வலிக்கும், கடித்தால் இனிக்கும்.

4. அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது.

5. உருவமில்லாதவன், சொன்னதைத் திருப்பிச் சொல்வான்

6. நிரப்பலாம், பிடிக்க முடியாது. உணரலாம், காண முடியாது.

7. விண்ணைத் சிரிக்கச் செய்வாள், கண்ணைப் பறிக்கச் செய்வாள்.

8. சூடுபட்டுச் சிவந்தவன், வீடு கட்ட உதவுகிறான்.

9. பற்கள் பல உண்டு கடிக்கத் தெரியாது

10. கோடையிலே ஆடி வரும், வாடையில் முடங்கி விடும்

## புதிர் தோட்ட விடைகள் 82

1. நிழல்
2. நாக்கு
3. கொசு
4. மின்மினி
5. கண்ணாடி
6. நெருப்பு
7. மழைநீர்
8. நத்தைக் கூடு
9. தலைமுடி
10. கடிகாரம்

## உறவுகள் 82க்கான சிறுவர் விவிலிய பதில்கள்

1) தூய ஆவியால்.
2) நாற்பது நாள் இரவும் பகலும்.
3) பாலைநிலத்திற்கு.
4) பசியுற்றார்.
5) நீர் இறைமகன் என்றால் இந்த கற்களை அப்பமாக்கும்படி கட்டளையிடும் என்பது.
6) வானதூதர் வந்து அவருக்கு பணி விடை செய்தனர்.
7) கலிலேயாவிற்கு.
8) கப்பர்நாகும்.
9) மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது.
10) பேதுரு எனப்படும் சீமோன் அவர் சகோதரரான அந்திரேயா, யாக்கோபு, அவர் சகோதரரான யோவான்.

# தூய நற்கருணை



### இயேசுவின் பாஸ்கா:

இயேசு யூதர்களின் பாஸ்கா நிகழ்ச்சியில் எந்தவித மாற்றங்களும் செய்யவில்லை. யூதச் சடங்குளின் அர்த்தங்களையே மாற்றும் இயேசுவின் இயல்பான பாணியே இங்கும் அரங்கேறுகின்றது. இரண்டாம் முறையாக அப்பம் பிட்கும்போது “ அனைவரும் இதை வாங்கி உண்ணுங்கள். இது என் உடல்” என்கிறார். பலருடைய வாழ்வுக்காக நடைபெறும், தன்னுடைய மரணத்தை உறுதி செய்யும் வகையில், தன்னுடைய மரணத்திற்கு அர்த்தம் சேர்க்கும் வகையில் இந்த விளக்கத்தை அளிக்கிறார் இயேசு.

பாஸ்கா செம்மறி போல தன் வாழ்வு பலியாகிறது என்ற எண்ணமும், அதனால் புதிய பாஸ்கா என்ற மீட்பின் வாழ்வு மக்களைச் சென்றடைகிறது என்ற எண்ணமும் இங்கு மேலோங்கி நிற்கும் மறை உண்மைகள்.

அதே போன்று, கிண்ணத்தை கையிலெடுத்து “ இது என் இரத்தம்" என்கிறார். புதிய உடன்படிக்கையின் இரத்தம், பாவ மன்னிப்பிற்கான இரத்தம் என்று புரிந்து கொள்ளப்படுகிறது இந்த நிகழ்ச்சி.

இயேசு தன்னில் வெளிப்படும் மீட்புக்காக நன்றி கூறியிருக்க வேண்டும். ஏனெனில் இது பாஸ்கா மரபுப்படி நன்றியின் கிண்ணம். இந்த கிண்ணம் நன்றி உறுதிப்பாட்டைக் காட்டுகிறது. தன்னுடைய வாழ்வில் யாவே கடவுள் செய்யும் மாபெரும் பாஸ்காச் செயலைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.


இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்ற இயேசுவின் வார்த்தைகள் புதுமையானவை. சீடர்களின் பாதங்களைக் கழுவிய நேரத்திலும் இயேசு இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார். நான் என் வாழ்க்கையை. இறையரசுக்குக் கையளிப்பது போல நீங்களும் கையளியுங்கள் என்ற பொருளில் இந்த பாஸ்கா நிகழ்வை என் நினைவாகச் செய்யுங்கள் என்று சொல்லியிருக்கலாம்.

ஆதித் திருச்சபையில் “ நான் பெற்றுக் கொண்டது இதுவே. இதையே உங்களுக்கு கையளிக்கிறேன்" என்ற வார்த்தைகள் மிக அழுத்தமான அதிகாரமிக்க அடித்தள ஆதார பாடம். யாராலும் கேள்விக்குறிக்கு உட்படுத்த முடியாத இறைவெளிப்பாட்டின் பாடம். கண்டிப்பாக வரும் தலைமுறையினரோடு பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய மறையின் மகத்தான சொத்து. இயேசு இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்று சொன்ன வார்த்தைகள் இத்தகைய பொருளைக் குறித்திருக்க வேண்டும். அடையாளச் செயல் மூலம் தன் வாழ்க்கையின் ஆழ்ந்த மெய்மையை காலகாலமாக நிலைத்திருக்க இயேசு எண்ணியிருக்க வேண்டும்.

G.RATHINI



# சலேத் மாதா வரலாறு




## (La Salette) சலேத் (தொடர்ச்சி)

வேலை செய்ய உங்களுக்கு ஆறு நாட்களைக் கொடுத்துள்ளேன். ஏழாம் நாளை நானே வைத்துக் கொண்டேன். ஆனால் அதனை என்னிடம் கொடுக்க யாருக்கும் விருப்பம் இல்லை. மேலும் வண்டி ஓட்டுபவர்கள் என் மகனுடைய பெயரை வீணாக உச்சரிக்காமல் இருப்பதில்லை. அவர்கள் சத்தியம் செய்கையில் அவருடைய பெயரை வீணாக்குகிறார்கள். இவை இரண்டுமே என் மகனின் துயரத்தை அதிகப்படுத்துகின்றன.

உங்கள் அறுவடை எதிர்காலத்தில் நாசமாகப் போகிறது என்றால், அது இப்படிப்பட்டவர்களின் செயல்பாடுகளால் தான். கடந்த ஆண்டே உருளைக்கிழங்கு விளைச்சல் குறித்து எச்சரித்தேன். ஆனால் நீங்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. மேலும் நீங்கள் சத்தியம் செய்ததையோ என் மகனின் பெயரை வீணாகப் பயன்படுத்துவதையோ மாற்றிக்கொள்ளவில்லை. ஆகவே உங்கள் உருளைக்கிழங்கு விளைச்சல் அழிந்து கொண்டிருக்கிறது. கிறிஸ்துமஸ் வரை இது தொடரும். அதன் பின் உருளைக்கிழங்கு விளைச்சலே இல்லாமல் போகும்.

உங்களிடம் சோளம் இருந்தால் அதை நீங்கள் விதைக்க வேண்டாம். அப்படி விதைத்தீர்கள் என்றால் பூச்சிகள் அதைத் தின்றுவிட்டு போகும். மிச்சம் ஏதாவது இருந்தால் அதை நீங்கள் அடித்துத் தூற்றுகிற பொழுது அது வெறுமனே தூசாகத்தான் போகும் . ஒரு மாபெரும் பஞ்சம் வரப்போகிறது. அப்பொழுது ஏழு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் பசியி–னால் நலிவுற ஆரம்பிப்பார்கள். குழந்தைகளை யார் வைத்திருக்கிறார்களோ அவர்களுடைய கரங்களிலேயே இறந்து போய் விடுவார்கள். மற்றவர்கள் பட்டினியின் மூலம் பரிகாரம் செய்வார்கள்.எல்லா விதைகளும் நாசமாகி விடும். திராட்சைகள் எல்லாம் அழுகிப் போகும். அவர்கள் மனம் மாறி விட்டார்கள் எனில், கற்களும், மலைப் பாறைகளும் கோதுமைக் குவியல்களாக அற்புதமாக மாறி விடும். பூமியில் தானாகவே உருளைக் கிழங்குகள் விதைக்கப்பட்டு முளைத்து வரும்.

என் குழந்தைகளே, உங்கள் ஜெபங்களை அனுதினமும் நன்றாகச் சொல்லுகிறீர்களா?
என் குழந்தைகளே, காலையிலும் மாலையிலும் கண்டிப்பாக ஜெபங்களைச் சொல்ல வேண்டும் . உங்களால் செபம் செய்ய முடியாத சூழலில் , ஒரு "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே "ஜெபத்தையும் ஒரு "அருள் நிறைந்த மரியே" ஜெபத்தையுமாவது சொல்ல வேண்டும். ஆனால் நேரம் கிடைக்கும் போது அதிகமாகச் ஜெபங்களைச் சொல்ல வேண்டும்.
ஒரு சில வயதான பெண்களைத் தவிர வேறு யாரும் கோவிலுக்குச் செல்வதில்லை. எல்லாக் கோடை காலங்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மக்கள் வேலைக்குச் செல்கிறார்கள். குளிர்காலத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் கோயிலுக்கு வந்து கிறிஸ்தவ மதத்தை எள்ளி நகையாடுகிறார்கள். மிகப் பசியுற்ற நாய்கள் எலும்பு வெட்டுபவனிடம் நிற்பது போல் தவக்காலத்தில் கறிக்கடைகளுக்கு ஓடுகிறார்கள்.
"நன்று .. என் குழந்தைகளே நான் சொன்ன இவற்றை எல்லா மக்களுக்கும் தெரியப்படுத்துங்கள் "....

**முற்றும்**



திருத்தந்தையின் அரியணை அமைந்துள்ள ஆலயம்
- உரோமையில்

புனித ஓவியங்கள் அமைந்துள்ள சிஸ்டைன் ஆலயம்
- உரோமையில்








# இளையோர் வாழ்வில் அறச்சீற்றம்!

வேதியர் பேரா. தீ. ம. சத்தியாகு வேங்கீடக்குளம், இந்தியா

## அநியாயத்தைக் கேட்க ஆளில்லையா?

பெரிய நாயகி அறுபது வயதை நெருங்கும் அனாதைப் பெண்மணி. பிச்சையெடுத்துப் பிழைப்பவர். தான் பிச்சை எடுத்தாலும் அதில் ஒரு பகுதியை ஏழைகளுக்கு உணவாக வழங்கும் இரக்க குணம் கொண்டவர்.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை மாலையும் புனித அந்தோனியார் கோவிலுக்குப் போய் அங்கே தனக்காகக் காத்திருக்கும் மாற்றுத் திறனாளிகள் (உடல் ஊனமுற்றோர்) 5–10 நபர்களுக்கு கடையில் வாங்கப்பட்ட உணவுப் பொட்டலங்களைக் கொடுப்பார். அன்றும் அதேபோல் செய்வதற்கு உணவகத்திற்குப் போய்க் கொண்டிருந்தார். திடீரென்று மூன்று ஆசாமிகள் அப்பெண்மணியை வழிமறித்து மிரட்டி, அவரிடமிருந்த 300 ரூபாவையும் (இந்திய ரூபாய்) பறித்துக்கொண்டு ஓடி பக்கத்திலிருந்த டாஸ்மாக் (போதை பான விற்பனை நிலையம்) கடையில் வாங்க ஆரம்பித்தனர். அப்பெண் "ஐயோ இந்த அநியாயத்தைக் கேட்க ஆள் இல்லையா? என்று அலறினார். வழியில் போய்க்கொண்டிருந்த நான்கு இளைஞர்கள் செய்தியை அறிந்து, பணம் பறித்துச் சென்ற குடிகாரர்களிடமிருந்து பணத்தைப் பறித்து, பெரிய நாயகியின் வழக்கமான பணி தொடர உதவினர். இது ஓர் உண்மை நிகழ்வின் சுருக்கம்.

### இயேசு வாழ்வில் அறச்சீற்றம்!

ஆன்மீக செயல்பாட்டாளர்கள் 'அறம்' என்பதற்குக் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளிக்கின்றனர். அறம் என்பதே சுகம் தான். அதுவும் நற்பண்புகள் கொண்டோரின் சுகம். குறிப்பாக இறைவனது சுகம் (உள்ளம்). அந்த சுக ஊற்றிலிருந்து வழிபவை அனைத்தும் நற்செயல்கள். அந்த நற்செயல்களுக்கு எதிராகச் செய்யப்படும் அனைத்து செயல்களுமே, அறச்சீற்றத்தை உருவாக்குபவைதான். இப்படிப்பட்ட செயல்கள் பல வடிவங்களில் பல இடங்களில் நடந்த வண்ணம் உள்ளன.

இயேசுவின் வாழ்விலும் பலர் தாங்கள் சட்டத்தை மதிக்கிறவர்களாகக் காட்டிக்கொண்டு மனச்சாட்சிக்கு அதாவது மனித நேயத்துக்கு எதிராக செயல்படுகின்றனர். இயேசு அவர்களைச் சில வேளைகளில் வன்மையாகவும், வேறு சில வேளைகளில் மென்மையாகவும் கண்டிக்கும் விதத்தில் அறச்சீற்றத்தை (கோபத்தை) வெளிப்படுத்துகின்றார். இன்னும் குறிப்பாகத் தம்மோடு நல்லுறவில், நட்புறவில் இருந்தவர்களிடமும் பொருளுள்ள விதத்தில் தமது அறச்சீற்றத்தை வெளிப்படுத்துகின்றார்.

### அறச் சீற்றமா? அக மாற்றமா?

" இவற்றை இங்கிருந்து.... என் தந்தையின் இல்லத்தை சந்தை ஆக்காதீர்" எருசலேம் ஆலயத்தூய்மையைக் காக்க சாட்டையடி கொடுக்கின்றார் இயேசு. **(காண். யோவா 2 : 13 – 16)**

" நான் தவறாகப் பேசியிருந்தால் தவறு என்னவெனக் காட்டும். சரியாகப் பேசியிருந்தால் ஏன் என்னை அடிக்கிறீர்" **(யோவா 18 : 23)** தலைமைக் குரு வீட்டிலிருந்த காவலர் தன்னை அடித்தபோது.

" என் கண்முன் நில்லாதே சாத்தானே.... மனிதருக்கு ஏற்றவை பற்றியே பேசுகிறாய்." **(மத் 16 : 23)** தன் பாடுகளை ஏற்க மறுத்த பேதுருவிடம்.

" எங்கள் கால்களில் ஒட்டியுள்ள உங்கள் ஊர்த் தூசியையும் உங்களுக்கு எதிராக உதறிவிடுகிறோம் ....." **(லூர்க் 10 : 11)** தம் சீடர்களை ஏற்றுக்கொள்ளாத ஊர்மக்களுக்குச் சொல்லச் சொன்ன இயேசுவின் செய்தி.

" சிறு பிள்ளைகளை..... தடுக்காதீர்கள்" **(மாற் 10 : 14)** தம்மிடம் அழைத்து வரப்பட்ட சிறுவர்களைத் தடுத்து, அதட்டிய தம் சீடர்கள் மீது கோபம் கொண்டார் இயேசு."

" நீங்கள் ஏன் எங்களைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா" **(லூக் 2 : 50)** தம் பணிகளை அறிந்திராத பெற்றோரிடம்.

" என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாக மாட்டார். இதை நீ நம்புகிறாயா" **(யோவா 11 : 26)** தம்மை நன்கு அறிந்த மார்த்தா தம்மை நம்பாமல் இருப்பதை அறிந்து கோவித்த இயேசு வியப்புடன், உரிமையுடன் கேட்டது.

" அறிவிலிகளே!..... நம்ப இயலாத மற்ற உள்ளத்தினரே" எம்மாவு சீடர்களிடம் இயேசு கூறியது. **(லூக் 24 : 25)**

" உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்பதா? எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்பதா? எது என்பது? **(மாற் 2: 9)** மக்கள் கூட்டத்திடம் இயேசு தம் அதிகாரத்தை நிலை நாட்டும் விதத்தில் கூறியது.

இப்படியும், இன்னும் பல இடங்களிலும், இளையோரிலும் இளையோரான முப்பத்து மூன்று வயதே முற்றுப் பெறாதவரான இயேசு நியாயமான காரியங்களுக்கு அறச்சீற்றம் கொண்டு உலக இளையோர் அனைவருக்கும் முன் உதாரணமாகத திகழ்கின்றார். எல்லாமே அறச் சீற்றம் கொண்டு வாழ்ந்து, சுகம், நல்ல மாற்றம் பெற உதவுவன.

### உலகப் போக்கை மாற்றுவோம்! கலகப் போக்கைத் தூற்றுவோம்.!

இளம் பருவத்தில் வாய்ப்புக் கிடைக்கும் பிழைகளை, தவறுகளை, குற்றங்களையெல்லாம் அறிவியல் பூர்வமாக வக்கணையாகச் செய்துவிட்டு, தள்ளாத முதிர் பருவத்தில் அவற்றை எண்ணிப்பார்த்து கழுவாய் (பரிகாரம்) தேட முயல்வது உலகப்போக்கு. நம்முடைய இளம் பருவச் செயல்பாடுகளில் இறையாட்சி சாசனங்களை நடைமுறைப் படுத்தி, அறச் சீற்றத்தை செயல்படுத்தி சீர்கெட்ட கோபத்தைத் தூக்கியெறிந்து மேற்கண்ட உலகப் போக்கை மாற்றுவோம். இதுவே இன்றைய நம் திருத்தந்தை பிரான்சிஸ், இளையோர் இன்றைய நிகழ்காலம் என்பதனை உள்ளர்த்தமாகக் கொள்வோம். அதே சமயத்தில்

நமது இந்த இளம் பருவத்தில் நாம் செய்யும் பிழைகளைக் கண்டிக்கும் உரிமைகளைக் கொண்டு திருத்துவோரைத் தண்டித்து வருத்தும் கலகப் போக்கினைக் கைவிடுவோம்.!

### அறச் சீற்றத்திற்கு அடி நாதங்கள்

நியாயமான கோபம் கொள்ளவும், அதன் வழியாக நீதியை நிலைநாட்டவும் செயல் வடிவம் பெறுவதே அறச்சீற்றம் என்ற ஆன்மீக ஆயுதம். அதற்கு அடி நாதங்களாக இருக்கக் கூடிய அருவருப்புச் செயல்பாடுகளில் முக்கியமானதாக இருப்பவற்றை அறிவோம். (இவை காணப்பட்டால் கண்டிப்பாக என்ன விலை கொடுத்தாலும் களையப்பட வேண்டும்)

* காட்டிக் கொடுத்து துரோகம் செய்தல்
* கடமையைச் செய்யாமல் நொண்டிச் சாக்குக் கூறுதல்
* பொய்யுரைத்து, உண்மையுரைத்து தீயன செய்தல்
* திருடுதல், பிறர்பொருள் உடமை, மனை விரும்பல்
* கையூட்டுப் பெற்று வாக்குரிமையை விற்றல்
* மட்டந்தட்டி தாழ்வு மனப்பான்மைக்கு வழிவகுத்தல்.
* முன்சார்புத் தனத்தால் முன்னேற்றம் தடைபடச் செய்தல்
* நுகர்வு வெறியைஊட்டி பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படுத்துதல்.
* பாலியல் வன்முறை (குடும்பத்தில் கூட கூடாது)
* தன்னலம், தற்புகழ்ச்சி, தவறை நியாயப்படுத்துதல்
* திட்டமிட்டு ஏமாற்றுதல், கலப்படம் செய்தல், சமூக ஆர்வலர்களின் கூர்மையைத் தகர்த்தல்.
* சமய நம்பிக்கையைக் கேள்விக் குறியாக்குதல்.

### இளையோரின் ஈடுபாடும் சான்று வாழ்வும்

முதலில் இளையோர் அறநெறியைக் கற்றறிய வேண்டும். அதற்குத் துணை நிற்கும் கூறுகளை (வாசிப்பு, அனுபவப்பகிர்வு, ஊடக வழி பயிற்சி etc ) ஆராய்ந்து செயல்பாட்டுக்கு ஏற்றுக்கொள்வது நல்லது. அறம் செய விரும்பு' எனத் தொடங்கி அகர வரிசையில் ஔவையாரால் வழங்கப்பட்டுள்ள 'ஆத்திச்சூடி' ஒவ்வொரு கருத்தும் அறிவியலின் அடிப்படை முழக்கம்தான்.

* மனித வாழ்வுக்கு அறம்தான் அடிப்படை என்பதை அறிந்த ஆன்றோர் இல்லறம்' 'துறவறம்' 'தனியறம்' என்று பிரித்து பிழையில்லாது வாழ வழிகாட்டியிருக்கின்றனர்.

* அய்யன் திருவள்ளுவரும் தனது உலகப் பொது மறையாம் திருக்குறளை 1. அறம் 2. பொருள் 3. இன்பம் என முப்பாலில் வடித்து முதன்மையாக அறத்துப்பாலை வைத்துள்ளார். அதனினும் சிறப்பாக ஓர் அதிகாரத்தையே ' அறம் வலியுறுத்துதல்' என்ற பொருளில் (குறள்கள் 31 – 40 ) வழங்கியுள்ளார்.

**இன்சொல் விளை நிலமா ஈதலே வித்தாக**
**வன்சொல் களைவட்டி வாய்மை எருவிட்டு**
**அன்பு நீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்**
**பைஸ்கூழ் சிறுகாலை செய்** என்று ஓர் அறநெறி சாரப் பாடல் கூறுகிறது.

**அறத்தை உயிரென மதித்து நிதம்**
**ஆர்வத் தோடதனைக் கடைப் பிடித்து**
**ஆண்டவன்பால் நம்பிக்கை வைத்து**
**சிரத்தை எடுத்து வாழ்வோர்க்கு என்றும்**
**சிறப்பாசி பல உண்டு** – தனிப்பாடல்

இவை மட்டுமன்றி ஏடுகள் பல படித்து, நல்ல அறங்களை இதயத்துள் புதைத்து இனிதே வாழ்வது இளையோர் கடனாகும் என ஆன்றோர் இயம்புகின்றனர். மலைப் பொழிவு அதுவும் குறிப்பாக, மத் 5 : 3 – 12 அறநெறிகளின் திரட்சியாகும். நீதி மொழிகள், சாலமோன் ஞானம், சீராக்கின் ஞானம், போன்ற திருவிவிலிய நூல்கள் அறநெறி வாழ்க்கைக்கு சிறந்த வழியைக் காட்டுகின்றன.

### அறச் சீற்றம் சுமையா? சுவையா?

சீற்றம் என்ற வார்த்தையே எதிர் மறைப் பண்பு கொண்டதுதான். ஆனால் அது நன்மையை நிலைநாட்ட தீமையை வேரொடித்து விரட்ட அவசியம் தேவை. அது அறத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்பட வேண்டும். தனி ஆளாக சரியான பார்வை இல்லாமல், அவசரப்பட்டு இளையோர் இந்த அறச் சீற்றத்தைக் கையிலெடுத்துச் செயல்படுத்துதல் ஆபத்தானது. முன் மதியுடன் குழுவாக அல்லது அமைப்பாகச் செயல்பட வேண்டும். முதலில் தன்னில் எழும் அறத்திற்கு எதிரான உணர்வுகள், செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பின்னர் தம் இல்லம், தெரு, பகுதி என ஏற்றமுறையில் எடுத்துச்சொல்லியும் பெரும் பிழை தொடர்ந்தால் உரியமுறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது மிக மிகச் சுமையான பணி. ஆனால் செயல்பாட்டு வெற்றிகளால் தனி மனித – குழும – சமூக அளவில் சுவையானதும் வெற்றியானதுமாக அமையும். இதற்கு இறைவேண்டல் அவசியம். " கடவுளால் ஆகாதது எதுவுமில்லை" என்ற நம்பிக்கையும் வேண்டும்.

இரண்டாம் வத்திக்கான் சங்க வெளியீடுகளில்
1. இன்றைய உலகில் திருஅவை.
2. சமூகத் தொடர்புக்கருவிகள்.
3. திரு அவையின் நற்செய்திப் பணி

ஆகியவற்றால் அறச்சீற்றம் இளையோர் வாழ்வுக்கு அவசியம் என்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

[இந்த படத்தில் உள்ள திருப்பீடச் சின்னத்தில் 11ஆம் பயஸால் பயன்படுத்தப்பட்ட மும்முடியையும், புனித பேதுருவின் சாவியும் இருக்கிறது. இது தங்கம் மற்றும் வெள்ளியாலான இரு சாவிகளாகும். விண்ணுலகிலும் (தங்கம்) மற்றும் மண்ணுலகிலும் (வெள்ளி) அனுமதிக்கவும், தடைசெய்யவும் திருத்தந்தைக்கு உள்ள, இயேசு ஆண்டவர் கொடுத்த அதிகாரத்தைக் இந்த சாவிகள் குறிக்கின்றது.]





## சார்ட் திருத்தலத் திருயாத்திரை - 22-05-2022



## திருவுடல் - திரு இரத்தப் பெருவிழா - 19-06-2022




## புனித சூசையப்பர் திருவிழா - 01-05-2022



# உன்னதத்தின் உதடுகள்

## அருட்பணி. ஜெயசீலன் சவேரியார் பிச்சை ச.ச.

**கோபத்திலோ வருத்தத்திலோ இருப்பவர்களை**
**சிறிது தனிமையில் இருக்க விடுங்கள்.**
**தனியாக விட்டு விடாதீர்கள்.**

**க**டையவன் ஒருவன் சாப்பிட்டு மூன்று நாட்கள் ஆகிவிட்டது. பசியின் கொடுமை, உடல் தளர்வு, மன மந்தம் இறுதியாக அந்த வீட்டிற்கு வருகிறான், யாசிக்கிறான். இவன் நிலை பார்த்த வீட்டு முதல்வன் அவன் மேல் பரிவு கொள்கிறான். உதவ உந்தப்படுகிறான். வீட்டின் வலது பக்கமாக அவனைப் பின்புறம் அழைத்துச் செல்கிறான். உணவு எடுத்து வருவதற்காக வீட்டுக்குள் முதல்வன் செல்ல, கடையவன் மரத்தடியில் அமர்ந்து மனம் குளிர புன்முறுவலோடு உணவை எதிர்நோக்கி நின்றான். உணவு வந்தது. பசியில் வயிறு கிறுகிறுக்க, மணம் மூக்கைத் துளைக்க, ருசி மனதை மயக்க, கைகள் உணவை நோக்கி ஓட்டம் எடுத்தது.

முதல்வனால் தடுக்கப்பட்டான். முதலில் செபம் பிறகு உணவு. இறைவனின் ஆசீரை யாசிக்க உதடுகள் முணுமுணுக்க வார்த்தைகள் வட்டமிட்டது. “விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே என்று முதல்வன் சொல்ல “விண்ணுலகில் இருக்கின்ற உங்கள் தந்தையே” என்று இழுத்தான் கடையவன். “உங்கள் தந்தையே இல்லை மாறாக எங்கள் தந்தையே” என்று திருத்தினான் முதல்வன். மீண்டும் மீண்டும் உங்கள் தந்தையே என்ற வார்த்தைகளைத் தான் அவன் உதடுகள் முத்தமிட்டன. கோபத்தின் உச்சத்திற்கே சென்றுவிட்டான் முதல்வன். ஏன் என்று கேட்க, கடையவனின் பதில் அவனை ஆச்சிரியத்தில் ஆழ்த்தியது.

எங்கள் தந்தையே என்றால் நமது தந்தை ஒருவரே. நமது தந்தை ஒருவரே, என்றால் நாம் இருவரும் சகோதரர்கள். எனது சகோதரன் என்னை எப்பொழுதுமே அவனது வீட்டின் உள்ளே அமரவைப்பான். அவனோடு அவனது குடும்பத்தோடு அமர்ந்து உணவு பரிமாறுவான். ஆனால், நீ என்னை வலதுபுறமாக வீட்டின் பின்புறம் அழைத்து வந்தாய், மரத்தடியில் அமர வைத்தாய், தனியாக என்னை உபசரிக்கிறாய். இப்படியிருக்க, உனது தந்தை எப்படி எனது தந்தை ஆவார்? எப்படி நமது தந்தை ஆவார்? உதட்டின் வார்த்தைகள் இங்கே உள்ளத்தைத் தொடவில்லை.

- உதடுகள் எங்கள் என்கிறது உள்ளமோ உங்கள் என்கிறது.
- சொல் நாம் என்கிறது, செயல் நீ என்கின்றது.
- வார்த்தைகள் நமது என்கின்றது, வாழ்வு எனது என்கின்றது
- நிழல்கள் நாங்கள் என்கின்றது, நிஜங்கள் நீங்கள் என்கின்றது.

# துயர் பகிர்கின்றோம்




தலைவலி காச்சல் என்று சற்றேனும் – நீ ஓய்வு
எடுத்ததில்லை. – துள்ளித் திரியும் பெண் மானாய்
துயில் கொள்ள நேரம் இன்றி துன்புற்றோர் துயர் துடைக்க
துணைக்கரமாய் நீ இருந்தாய்!

அன்பு, அறிவு, ஆற்றல்கள் – அனைத்திலும்
அடுத்தவர்க்கு மாதிரியாய் நீ – வாழ்ந்தாய்,
உற்ற துணை இழந்து வலி சுமந்து வாழந்த போதும்! – அறம்
சார்ந்த நற்பணிகளினால் அடுத்தவரை நீ – கவர்ந்தாய்!

குடும்பத்தில் நான்காவது பிள்ளையாக இருந்தாலும் – நாம்
புறம் தள்ளும் வேலைகளை நொடிப் பொழுதில் செய்திடுவாய்,
அதிகாலையிலே அனைவரையும் துயில் எழுப்ப
எம்மூர் ஆலய மணி கூட – உன் வரவைக் காத்து நிற்க்கும்!

சிந்தையிலே பதியவைக்கும் உன்ஆன்மீக தாகமும்,
பேச்சும், செயல் திறனும், செவ்வையான பாதையிலே – நாம்
வாழ வழிகாட்டும், எனக்காத்திருந்தோமே! ஏமாற்றிவிட்டாயே!

எதிர்பாரா வேளையிலே! பொல்லாத வியாதி
உன்னைக் காவு கொள்ள வந்த சேதி கேட்டு!
உதிரம் உறைந்து, ஊன் உறக்கம் – இன்றித் தவித்தாயே!

உருக்குலைந்து தடுமாறி, பாவத்தின் சாபத்தால்
பூமியில் வீழ்ந்தோரை – ஆபத்தில் மீட்டிட ஆண்டவர்
உண்டென சட்டென்று சிட்டாகப் பறந்தாயா?
டடி, மம்மி எம்மை தனியே விட்டுச்செல்ல
நாம் செய்த குற்றம் என்ன? – என்று
உன் இரு செல்வங்களும் ஆறுதலுக்கு ஓர் இடம் இன்றி,
அல்லலுறும் – நிலையதனை – நீ அறிவாயா?

நிழலாய் நீ விட்டுச் சென்ற அனைத்து நற்பண்புகளாலும்,
நிறையப் பெற்று இவர்கள் வளமுடன் – வாழ்ந்திட
வரம் வேண்டி வருவாயா?
வருடங்கள் பல ஆனாலும்! நீ எம்முடன் வாழ்ந்த தருணங்கள்
விலைமதிப்பற்றவை – எம் செல்வமே!
என்றும் எம் உள்ளத்தில் நிலைத்திருக்கும் உன் ஆன்மா
நித்திய அமைதியிலே இளைப்பாறிட
நிதமும் இறைவனை – இறைஞ்சுகின்றோம்!

தகவல்:– செல்வி . சு . லூசியாமேரி மற்றும்
சகோதர, சகோதரிகள்



# புனித பேதுரு பாவிலு (ஆனி 29)

## புனித இராயப்பர் (Saint Peter) (முதலாம் நூற்றாண்டு)




பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையின் முதற் தலைவராக இருந்தவர் புனித இராயப்பர். இவர் இறைமகன் இயேசுக்கிறிஸ்துவாலேயே நேரடியாக நியமிக்கப்பட்டவர். இயேசுவின் பரலோக ஆரோகணத்தின் பின் ஆதித்திருச்சபையின் தலைமைப்பணியை ஆரம்பிக்கிறார் இராயப்பர். உரோமைய நூற்றுவர் தலைவனை திருச்சபையிற் சேர்த்துக்கொள்வதன் மூலம் புற இனத்தாரை முதன் முதலில் சேர்த்தவரும் அவரே. புற இனத்தவரின் அப்போஸ்தலரான புனித சின்னப்பர் தான் அவரின் தலைமையை ஏற்றுக்கொள்கிறார். அவர் ஏரோது அரசனால் சிறை வைக்கப்பட்டபோது அற்புதமாக வானதுாதரால் காப்பாற்றப்படுகிறார். திரும்பவும் விருத்தசேதனம் இன்றிப் புற இனத்தார் திருச்சபையில் ஏற்றுக் கொள்ளப்படலாம் எனத் தீர்மானம் எடுத்த ஜெருசலேம் சங்கத்திலும், அவர் கலந்து கொண்டார்.

நீரோ சக்கரவர்த்தி கி.பி 64ல் உரோமையை எரித்தான். இதைத்தொடர்ந்து கிறிஸ்தவர்களுக்கெதிரான வேதகலாபனை ஆரம்பமாகிறது. நீரோ சக்கரவர்த்தி கி.பி 68ல் தற்கொலை செய்து கொண்டான். ஆகையால் புனித இராயப்பருடைய வேதசாட்சிமரணம் கி.பி 64ற்கும் 68ற்கும் இடைப்பட்ட காலத்திலேயே நடைபெற்றிருக்க வேண்டும். புனித இராயப்பரை சிலுவையில் அறைந்து கொல்லுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் புனித இராயப்பர் இயேசுவைப் போல் அறையப்பட விரும்பாது தன்னை தலைகீழாக அறையும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவர் தலைகீழாகவே சிலுவையில் அறையுண்டு இறந்தார். அவருடைய கல்லறையின்மேல் தான் இன்றைய சம்பேதுருவானவர் பேராலயம் கட்டப்பட்டுள்ளது.


### புனித பவுல்

கிறிஸ்து இறந்து, உயிர்த்து, விண்ணகம் சென்றபின், புனிதர் இராயப்பர் **(St. Peter)** தலைமையில் திருச்சபை நிறுவப்பட்டு பன்னிரண்டு அப்போஸ்தலர்களும், மற்ற திருதூதர்களும் உலகின் பல்வேறு நாடுகளுக்கு சென்று கிறிஸ்துவை பற்றி எடுத்து கூறினர். அதிலும் மிகவும் முக்கியமான பணியை செய்தவர்களில் ஒருவர்தான் பவுல். தமிழில் “ லூத்தரன் திருச்சபை” **(Lutharan Church)** மக்கள் இவரை பவுல் என்றும், கத்தோலிக்க திருச்சபை **(Catholic Church)** மக்கள் சின்னப்பர் என்றும் அழைப்பார்கள். புனிதர் பவுல் தன்னுடைய வாழ் நாள் முழுவதும் புனித வாழ்க்கை வாழ்ந்தவர். தூய ஆவியின் கனிகளைக் கொண்டவர். இயேசுக்கிறிஸ்து உலகின் மீது மண்டிக்கிடக்கும் பேரிருளை நீக்கிட, தனது பல்கதிர்களை பரப்பி, உலகில் உள்ளோர் வியந்து போற்ற ஒளிரச் செய்து, அதில் மக்களை நல்வழியில் கொண்டு செல்ல இறைவன் கண்டதுதான் பவுல் அடிகளார். தமஸ்கு நகருக்கருகே பவுல் கண்ட காட்சியில் உயிர்த்த இயேசுவுடன் கலந்துரையாடியது, அவரது வாழ்வில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இதனால் வரலாறு காணாத அளவுக்கு, அவர் கிறிஸ்துவுக்காக உழைத்து, உயிர்த்த கிறிஸ்துவின் திருத்தூதர் ஆனார். பலவிதமான எதிர்ப்புகள், அவமானங்கள், சாட்டையடிகள், கல்லடிகள், ஒடுக்கப்பட்ட நிலை, சிறைவாசம் இவை போன்ற இன்னும் பல கொடுமைகள், இவரை மேலும் மேலும் திருச்சபையின் அசையாத தூணாக்கியது. இவர் எழுதிய திருமுகங்களில் "கிறிஸ்துவில்" என்ற சொல் ஏறக்குறைய 50 முறை வருகின்றது. இது அவரின் ஆன்மீகத்தையும், அப்போஸ்தலிக்க வாழ்வையும், வேத கலாபனையையும், பணிவாழ்வையும் வெளிப்படையாக காட்டுகின்றது.


### ரோமாபுரியில் புனித தேவசகாயத்தின் பட்டமளிப்பு விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் 15~05~2022





## அம்மா சொல் கேள்!



பெண்கள்

பெண்கள் நாட்டின் கண்கள் என்பது பெரியோர் வாக்கு.

தாய்நாடு என்றும் தாய்மொழி என்றும் தாய்நிலம் என்றும் பெண்ணின் பெயர் கொண்டு அனைத்தும் அழைக்கப்படுகின்றன. பெண் ஒரு சமூகத்தின் ஒரு கலாச்சாரத்தின் ஒரு பண்பாட்டின் வேராக தூணாக நிற்கிறாள். விரும்பியோ விரும்பாமலோ சமூகத்தின் முக்கிய இடங்களில் பொறுப்பாளியாக பெண் இருக்கிறாள். சாதாரணமாக ஒரு வீட்டில் சிறுவர்கள் குழப்படி செய்தால் கூட "தாயின் வளர்ப்பு சரியில்லை" என்று பெரும்பாலானவர்கள் கூறுவதை பார்க்கிறோம். இது எதனைக் காட்டுகிறது என்றால் பெண்களின் பொறுமையும், கடமையையும், தகுதியையும் காட்டுகிறது. பெண்மை என்றால் அன்பு. பெண்மை என்றால் தியாகம். பெண்மை என்றால் பொறுப்பு என்றாகிறது.

பெண்கள் இல்லை என்றால் வாழ்க்கை இல்லை. எல்லாப் பிள்ளைகளும் தங்கள் அம்மாவை அன்புடன் மதிக்க வேண்டும்!

ஆடெலின் – St Denis

செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றை மேய்த்துக் கொண்டு வந்தவன், மரத்தடியில் உட்கார்ந்து கண் மூடி, புல்லாங் குழல் வாசித்துக் கொண்டிருந்தான். புல்வெளியைச் சுற்றி வேலி போடப் பட்டிருந்தது. அதன் அருகே, ஓர் ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலிக்கு வெளிப்பக்கம் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டியைப் பார்த்தது.

வேலிக்குள் முகத்தை நுழைத்துக்கொண்டு, ஓநாய் எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஓர் ஆட்டுக்குட்டி, உனக்கு என்னவேண்டும்?'' என்று கேட்டது. ஓநாயும் நண்பா, நண்பா, இங்கே இளசான புல் கிடைக்குமா என்று பார்க்கிறேன்! இளம்புல் என்றால் எனக்கு ரொம்பப் பிரியம். அதைத் தின்று, ஜில்லென்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது! எனக்கு அது கிடைக்கவில்லை'' என்று வருத்தத்துடன் கூறியது. அப்படியா! நீ புல்லா சாப்பிடுவாய்? நீ மாமிசத்தைத்தான் சாப்பிடுவாய் உனக்குக்கிட்டவே போகக்கூடாது என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி. சேச்சே…அதெலாம் சுத்தப் பொய்!'' என்றது ஓநாய்.

`` அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து, மலையின் அந்தப் பக்கம் இளம்புல் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். நாம் இரண்டு பேரும் போய், அதைச் சாப்பிட்டுவிட்டு, ப்ரெண்ட்ஸாக ஜாலியாகச் சுற்றலாம்!'' என்று சொல்லிவிட்டு ஆட்டுக்குட்டி வேலி இடுக்கின் வழியாக நுழைந்து, ஓநாயின் பக்கம் போயிற்று. உடனே ஓநாய் அதன்மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது.

அனுபவம் நிறைந்த அம்மா, அப்பா பேச்சை கேட்டிருந்தால், மதிப்பு வாய்ந்த, தன் உயிரை இழந்திருக்காது அல்லவா?




## சின்னக் கரங்களே!

இப்பகுதியை அலங்கரிக்க உங்கள் கைகளால் வரைந்த வண்ணச் சித்திரங்களை எதிர்பார்க்கின்றோம். எனவே தயங்காமல் உங்கள் சித்திரங்களை எமக்கு அனுப்ப மறவாதீர்கள்……





## உறவுகள் நிர்வாகக் குழுவினால் செயலபடுத்திய மரியன்னை நோக்கிய பயணம் கண்காட்சி - 05-06-2022



## புனித அந்தோனியார் திருவிழா ~ சார்சல் ~ 13~06~2022

